விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இப்படி கள்ள மார்க்கட்டில் இரசாயன உரங்களை வாங்கி போடுவதாக இருந்தால் எப்படி விவசாயிகள் விவசாயம் செய்து தங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளமுடியும் என்று கேட்கிறேன். இன்றையதினம் விவசாயிகள் கள்ள மார்க்கட்டில் உரம் வாங்கிப் போடுவதன் காரணமாக அவர்கள் வேதனைப்படுகிற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அரசாங்கம் விவசாயிகளுக்கு எப்போது உரம் தேவையோ அந்த நேரத்தில் அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைக்கு . . .

(திரு. கு. காமாட்சி அவர்கள் தலைமை.)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : ஆன் எ பாயின்ட் ஆப் எலுஸிடேஷன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய உரையில் சொல்லியிருக்கிறார்கள் இதைப் பற்றி. தனியார்களுக்கு உரம் விற்கிற அந்த உரிமை கொடுக்கப்படுவதால்தான் கள்ள மார்க்கெட் உண்டாகிறது என்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியார் துறைக்கு இனிமேல் விற்பதற்கு உரம் கொடுக்கக்கூடாது, தனியார் துறை மூலம் விநியோகம் செய்யக் கூடாது என்பதை ஒத்துக்கொள்கிறார்களா என்பதற்கு விடை பெற விரும்புகிறேன்.

(4) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவைத் துணைத் தலைவரை தலைமை வகிக்க அனுமதிக்க மறுத்ததாகக் கூறப்படுவது குறித்து

DR. H. V. HANDE : Sir, on a point of order. The Hon. Speaker has just now left the Chair and a member of the Panel of Chairmen is occupying the Chair. As per our rules, 'at the commencement of every session or from time to time, as the case may be, the Speaker may nominate from amongst the members of the Assembly a panel of not more than six-Chairmen, any one of whom may preside over the Assembly in the absence of the Speaker and the Deputy Speaker when so requested by the Speaker or, in his absence, by the Deputy Speaker or, in his absence also, by the Chairman presiding . . . "

Now, the Hon. Deputy Speaker, the hon. Mr. Srinivasan is still in office. A no-confidence motion that has been tabled **(Interruption) I am on a point of order (Interruptions).**

1974 மார்ச் 6] [Dr. H. V. Hande]

(முற்பகல் 10-30)

I am on a point of order. I will finish and then other hon. Members can express their views. My point is this. When the Deputy Speaker is still in office and when he is here (Interruptions) cross-talks வேண்டாம் He is still here in office. (Interruption) Yes, a no confidence motion has been moved . . .

THIRU V. KRISHNAMOORTHI: He is not here in the House now.

DR. H. V. HANDE: My information is that the Deputy Speaker was here and he was not allowed to take the Chair . . .

மாண்புமிகு மாற்றுத் [redacted] தலைவர் (கு. காமாட்சி): *துணை சபாநாயகர் இப்போது சபையில் இல்லை. அதனால்தான் நான் உட்கார்ந்து இருக்கிறேன்.*

THIRU V. KRISHNAMOORTHI: He was not here in the House.

DR. H. V. HANDE: I will finish my point of order. *நான் என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டரை முடித்து விடுகிறேன்.*

அதற்குப் பிறகு நீங்கள் தீர்ப்புக் கொடுங்கள். டிபுடி ஸ்பீக்கர் இங்கே உட்கார வேண்டுமென்று கேட்டதற்குப் பிறகு கூட . . . (குறுக்கீடு) கேட்டார். அனுமதி கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): *துணை சபாநாயகர் இப்போது அவையில் இல்லை. வரும்போது பார்த்துக் கொள்ளலாம்.*

டாக்டர் எச். வி. ஹாண்டே: *துணை சபாநாயகர் வந்தால் உட்கார ஆசனம் கொடுக்கப்படுமா?*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): துணை *சபாநாயகர் வரும்போது அதைப் பற்றி யோசிக்கலாம். இப்போது அதைப் பற்றி விவாதம் வேண்டாம்.*

(டாக்டர் எச். வி. ஹாண்டே. . .குறுக்கீடு).

MR. CHAIRMAN (THIRU K. KAMATCHI): No point of order; please resume your seat. Thiru Jayaraman . . .